# ADM COURT, SANKARANKOVIL

**தேதி 09.06.2026**

**அசல் வழக்கு எண்.363/2015**

**பி.வா.சா.1 (வேலுநாச்சியார்) மீண்டும் ஆஜர் சத்தியபிரமாணத்தின் பேரில் வாதி தரப்பில் குறுக்குவிசாரணை தொடர்ச்சி**

எனது கணவர் கோமதியம்மாள் என்பவரிடமிருந்து கிரையம் எதுவும் பெற்றுள்ளாரா என்றால் பெற்றுள்ளார். எனது கணவர் அவ்வாறு கிரையம் பெற்ற இடத்தின் சர்வே எண் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. எனது கணவர் எவ்வளவு விஸ்தீரணம் கொண்ட இடத்தை கிரையம் பெற்றுள்ளார் என்றால் 4 ஏக்கர் இடத்தை கிரையம் பெற்றுள்ளார். எனது கணவர் 4 ஏக்கர் இடத்தை கிரையம் பெறவில்லை என்றாலும், சர்வே எண்.339/2 ல் உள்ள இடத்தை மட்டும்தான் கிரையம் பெற்றுள்ளார் என்றாலும் சரியல்ல. மேற்கண்ட கிரைய ஆவணத்தை நீதிமன்றத்தில் என்னால் தாக்கல் செய்ய இயலுமா என்றால் இயலும். மேற்கண்ட ஆவணத்தை தாக்கல் செய்தால் வழக்கின் உண்மை நிலவரம் தெரிந்துவிடும் என்பதால் அதை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

2. கோமதியம்மாளுக்கு அவர் தந்தை வழி கிடைக்கப்பெற்ற சொத்துக்களில் நாங்கள் உரிமை கோருகிறோமா என்றால் இல்லை. அவருக்கு தந்தை வழி கிடைக்கப்பெற்ற சொத்துக்களை நாங்கள் வாங்கவில்லை. கோமதியம்மாளுக்கு தந்தை வழியாக பாத்தியப்பட்ட சொத்துக்கள் தற்போது யாரிடம் உள்ளது என்றால் ராஜேந்திரனிடம் உள்ளது. ராஜேந்திரன் அந்த சொத்துக்கள் தனக்கு கோமதியம்மாள் பிறப்பித்துக்கொடுத்த உயில் ஆவணத்தின் மூலம் பாத்தியப்பட்டது என கூறி வைத்துக்கொண்டுள்ளார் என்றால் சரிதான். அந்த உயில் ஆவணம் மோசடியானது.

3. திருமலைமுத்துதேவருக்கு பாத்தியப்பட்ட இடங்களுள் எத்தனை இடங்களை ராஜேந்திரன் மோசடியாக வைத்துள்ளதாக நான் கூறுகிறேன் என்றால் திருமலைமுத்துதேவருக்கு பாத்தியப்பட்ட 4-5 இடங்களை ராஜேந்திரன் மோசடியாக வைத்துள்ளார். திருமலைமுத்துதேவருக்கு பாத்தியப்பட்டதாக சொல்லப்படும் சொத்துக்களில் எனது தந்தை ராமசாமிதேவருக்கும் பங்கு உள்ளது. எங்கள் குடும்பத்திற்கு பாத்தியப்பட்ட இரவை பாசனம் கொண்ட நிலம் எவ்வளவு இருக்கும்

சுமார் 5 ஏக்கர் இருக்கும். மேற்கண்ட இரவை பாசன நிலங்களுக்கு கிணறு, மின்இணைப்பு ஆகியவை உள்ளனவா என்றால் உள்ளன.

4. சர்வே எண்.191/7, 223/4, 190/4 மற்றும் 371/19 ஆகியவற்றில் உள்ள இடங்கள் திருமலைமுத்துதேவருக்கு பாத்தியப்பட்ட தனிப்பட்ட இடங்கள் என்றால் சரியல்ல. சர்வே எண்.342/5, 335/3, 335/4 மற்றும் 339/3 ஆகியவற்றில் உள்ள இடங்கள் கோமதியம்மாளுக்கு பூர்வீகமாக பாத்தியப்பட்ட இடங்கள் என்றால் எனக்கு தெரியாது. கோமதியம்மாளுக்கு அவரது தந்தைவழி கிடைக்கப்பெற்ற சொத்துக்களின் விஸ்தீரணம் என்னவென்றால் எனக்கு தெரியாது. கோமதியம்மாளுக்கு அவர் தந்தைவழியாக கிடைக்கப்பெற்ற சொத்துக்கள் தற்போது ராஜேந்திரன் வசம் உள்ளது என்றால் சரிதான்.

5. ராஜேந்திரன் மைனராக இருந்ததால் அவரது தந்தை துரைராஜை அவரது காப்பாளராக காண்பித்து கோமதியம்மாள் அவருக்கு 27.12.1982 ம் தேதியில் ஒரு உயில் ஆவணம் பிறப்பித்துக்கொடுத்தார் என்றால் சரியல்ல. உயில் ஆவணம் மோசடியாக உற்பத்தி செய்யப்பட்டது. கோமதியம்மாள் 17.04.1992 ம் தேதியில் இறந்தபிறகு மேற்கண்ட உயில் ஊர்ஜிதத்திற்கு வந்தது என்றாலும், அந்த உயிலின் அடிப்படையில் அதில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்துக்களை ராஜேந்திரன் பெற்று அனுபவித்து வருகிறார் என்றாலும் சரியல்ல. மேற்குறிப்பிட்ட உயிலில் உள்ள சொத்துக்களுக்கு ராஜேந்திரன் பெயரில் பட்டா ஏற்பட்டுள்ளதா என்றால் தற்போதுதான் பட்டா ஏற்பட்டுள்ளது. பிராதுதபசில் சொத்துக்களுள் எங்களுக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களுக்கு எங்கள் பெயரில் பட்டா மாற்றம் கோரி நடவடிக்கை எதுவும் நாங்கள் எடுத்துக்கொண்டோமா என்றால் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

6. பிராது தபசில் சொத்துக்களுக்கு ராஜேந்திரன் பெயரில் பட்டா ஏற்பட்டபிறகு அவர் தனது மனைவிக்கு அந்த சொத்துக்கள் பொறுத்து 26.10.2007 தேதியிட்ட ஏற்பாடு ஆவணம் பிறப்பித்துக் கொடுத்தார் என்றால் சரிதான். மேற்படி ஏற்பாடு ஆவணம் எழுதப்பட்ட விபரம் எங்களுக்கு தற்போதுதான் தெரியும். வாதி தாக்கல் செய்துள்ள இவ்வழக்கு முன்தீர்ப்பு தடையால் பாதிப்படையவில்லை என்றால் சரியல்ல. நாங்கள் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் குறிப்பிட்டுள்ள முன்வழக்குகளில் பிராது தபசில் சொத்தின் உரிமைமூலம் பொறுத்து இறுதியாக தீர்மானிக்கப்படவில்லை

என்றால் சரியல்ல. வாதி தாக்கல் செய்துள்ள இவ்வழக்கு அனுமதிக்கப்படவேண்டியது என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**